பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 24 புதன்கிழமை 06.04.2022 கதிர் 21

## சுகாதார ஊழியர்கள் இன்று கிளிநொச்சியில் கவனவீர்ப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஏப்.06

அரசின் மோசமான பொருளாதார கொள்கை காரணமாக நோயாளர்களும் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. ☞7

# பொருளாதார நெருக்கடி உக்கிரமடையும்; உணவுப் பஞ்சம் ஏற்படும்; இருண்ட யுகம் ஏற்படாமல் இவ்வாரத்துக்குள் தீர்வைக் காணுங்கள்!



## அனைத்து எம்.பிக்களுக்கும் சபாநாயகர் அழைப்பு

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மேலும் உக்கிரமடையக் கூடும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதேபோல உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில் இருந்து மீள்தற்கு ஜனநாயக வழியில், அரசமைப்பு ரீதியாக பொதுவான தொருவேலைத்திட்டத்தை இவ்வாரத்துக்குள் உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள் – அதனை செயற்படுத்துங்கள்.

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அவசர கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்ப. வேளையின் போதே, மக்களின் சார்பில் தான் இந்தக் கோரிக்கையை விடுக்கிறார் என சபாநாயகர் குறிப்பிட்டார்.

கடும் பொருளாதார நெருக்கடியின் ஆரம்ப ☞7

# பெரும்பான்மை உள்ளது ராஜபக்ஷக்கள் திண்ணம்



## எதிரணி ஒற்றுமைப்படாத வரையில் ஆபத்து ஏதுமில்லை என நம்பிக்கை


கொழும்பு,ஏப்ரல் 06

நாடாளுமன்றில் தனது பெரும்பான்மையை தக்கவைத்துக்கொள்ள திரைமறைவில் காய்களை நகர்த்திக் கடுமையாகப் போராடி வரும் ஆளும் தரப்பு இன்னும் தங்களுக்கு பெரும்பான்மை இருப்பதாகக் கருதியே செயற்பட்டு வருகின்றது.

இதேசமயம் நாடாளுமன்றில் தமது பெரும்பான்மையைத் தக்கவைக்கொள்ள ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் அரசியல் கட்சி பிரமுகர்களுடன் தொடர்ச்சியான பேச்சுகளில் ஈடுபட்டுவருகின்றனர். ☞2

## பதவி விலகார் கோட்டாபய!

### அமைச்சர் ஜோன்ஸ்டன் திட்டவட்டமாக அறிவிப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எந்தச் சந்தர்ப்பத்திலும் பதவி விலக மாட்டார் என ☞2

## நாடாளுமன்றத்துக்குள்ளும் உருவெடுத்தது ஆர்ப்பாட்டம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தியினர் நாடாளுமன்றத்திற்குள் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அரசாங்கத்தின் பிரதம கொறடாவாக ☞2



## புதிய நிதி அமைச்சரும் ஓட்டம் பிடித்தமை ஏன்?

### சபையில் சஜித் கேள்வி



நாட்டில் தற்போது நிதி அமைச்சர் இல்லை. புது நிதி அமைச்சராக அலி சப்ரி பதவி ஏற்றார். பின்னர் அவரே விலகிச் சென்றார். இதற்கான காரணம் என்ன? இன்று நாட்டில் நிதி அமைச்சர் யார் ☞2

## சுகாதார அமைச்சுக்கு முன் இன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்காரணமாகொழும்பு நகர மண் ப பகுதியை நோக்கிய மருதானை டீன் வீதி முழுவதுமாக இன்று முற்பகல் தடைப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. ☞2

## சால்வையைத் துறந்த சமல்!



எப்போதும் சிறப்பு நிற சால்வையை அணிந்திருக்கும் முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ நேற்றைய தினம் சால்வையின்றி சபையில் பிரசன்னமாகியிருந்தார். ☞2

## இலங்கையை உன்னிப்பாகக் கவனிக்கின்றது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸில்

இலங்கையில் நிலவும் அரசியல் குழப்ப நிலைகள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸில் அறிவித்துள்ளது. ☞2

## இலங்கைக்குக் கடத்த முயன்ற ரூ.10 கோடி ஐஸ் சிக்கியதாம்!

### இராமநாதபுரம் கடல் பகுதியில்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.06

தமிழகம் இராமநாதபுரம் கடல் பகுதியிலிருந்து இலங்கைக்குக் கடத்த முயன்ற ரூ 10 கோடி ☞2

## தமிழ் முற்போக்குக் கூட்டணியினரின் போராட்டம் நாளை தலவாக்கலையில்

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசுக்கு எதிரான போராட்டம் நாளை தலவாக்கலை நகரில் நடக்கும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தலவாக்கலை ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வவுனியாவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முரண்பாடு ஏ9 வீதியின் குறுக்கே பஸ்களை நிறுத்தி போராட்டம்





வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று மதியம் 12.00 மணியளவில் எரிபொருள் வழங்குவதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இரண்டு பேருந்தினை ஏ9 வீதியின் குறுக்கே நிறுத்தி சாரதிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஏ9 வீதியூடான போக்குவரத்து சுமார் 45 நிமிடங்கள் வரை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஈரப்பெரியகுளம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு டீசலை பெற்றுப்கொள்வதற்காக வாகனங்கள் காத்திருந்த போது டீசல் நிறைவடைந்துள்ளதாக எரிபொருள் நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். டீசல் இருந்த போதிலும், தற்போது டீசல் நிறைவடைந்து விட்டதாக எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் கூறுகின்றனர் எனத் தெரிவித்து சாரதிகள் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக ஏ9 வீதியின் குறுக்கே இரு பேரூந்துகளை நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஏ9 வீதியின் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது. நீண்ட வரிசையில் வாகனங் கள் காத்திருந்தன. சம்பவ இடத்திற்கு ஈரப்பெரியகுளம் பொலிஸார் உடனடியாக வருகை தந்து எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளருடன் கலந்துரையாடினார். அத்தியாவசியத் தேவைக்காக டீசல் இருப்பதாக இதன்போது முகாமையாளர் தெரிவித்தார். இதனை யடுத்து எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய தேவைகளுக்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த 2,500 லீற்றர் டீசல் வாகனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, ஏ9 வீதியின் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

## இலங்கையை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தொடர்பாக மனித உரிமைகள் கவுன்ஸில் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெறும் அமைதியான போராட்டங்கள் மூலம் மக்கள் தங்களது பிரச்சினைகளை வெளிப்படுத்தும் நிலையில், அந்த உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அறிவித்துள்ளது.

போராட்டங்களின் போது அமைதியை நிலைநாட்ட ஜனநாயக ரீதியாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டவையாக அமைய வேண்டும் என்றும் மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இந்த நெருக்கடி நிலைமையைத் தணிப்பதற்கான அரசாங்கத்தின் இயலுமை இராணுவமயப்படுத்தப்பட்ட நகர்வுகளில் தாக்கம் செலுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம், அரசியல் கட்சிகள் மற்றும் குடிசார் அமைப்புகள் என்பன இணைந்து பேச்சு நடத்தி பொருளாதார நெருக்கடிக்கு வினைத்திறனான தீர்வினை எட்ட முயற்சிக்க வேண்டும் என மனித உரிமைகள் கவுன்ஸில் வலியுறுத்தியுள்ளது.

## தமிழ் முற்போக்குக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரில் தமிழ் முற்போக்கு கூட்டணி அரச எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்த நிலையில் ஊரங்கு சட்டம் காரணமாக அது பிற்போடப்பபட்டது.

அந்தப் போராட்டத்தை நாளை நடத்த உள்ளதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் இணைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்தப் போராட்டத்தில், கட்சி, தொழிற்சங்க பேதமின்றி அனைவரும் பங்கேற்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் இணைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் அழைப்பு விடுத்துள்ளார்.

## இலங்கைக்குக் கடத்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(இந்தியப் பணத்தில்) மதிப்பிலான போதைப் பொருள் தமிழகப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் அருகே கடற்கரைப் பகுதியிலிருந்து இலங்கைக்குப் போதைப் பொருள்கள் கடத்தப்பட இருப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அங்கு சென்ற புலானாய்வுத் துறையினர் நடுக்கடலில் அதிவேகமாகச் சென்ற பைபர் படகு ஒன்றை விரட்டிச் சென்றனர். அதன்போது தூத்துக்குடி அருகே முள்வேலி கடல்பகுதியில் படகை மடக்கிப் பிடித்தனர்.

இதன்போது படகோட்டி கடலில் குதித்து, நீந்தித் தப்பியுள்ளார் இதன்பின்பு படகை சோதனை செய்த சமயம் இந்திய நாணயம் 10 கோடி ரூபா மதிப்பிலான 12கிலோ ஐஸ் கைப்பற்றப்பட்டதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட பைபர் படகைக் கைப்பற்றிய பொலிஸார் தப்பி ஓடிய படகோட்டியைத் தேடிவருகின்றனர்.

இராமநாதபுரம் கடலோரப் பகுதியிலிருந்து இலங்கை வழியாக வளைகுடா நாடுகளுக்கு இந்தப் போதைப் பொருள்கள் கடத்த இருந்தமை தெரியவந்துள்ளது. கடந்த 4ஆம் திகதியும் இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த சுமார் ஒரு கோடி மதிப்புள்ள ஐஸ் போதைப்பொருளை வாகன சோதனையின் போது ராமநாதபுரம் சிறப்புப் பொலிஸார் கைப்பற்றினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## புதிய நிதி அமைச்சரும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை தெரிந்து கொள்ள விரும்புகின்றேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா தெரிவித்துள்ளார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் –

நேற்றைய தினம் இடம்பெற்ற அமைதியான போராட்டத்தில் இலக்கத்தகடு அற்ற மோட்டார் சைக்கிள்களில் ஆயுதம் தாங்கிய படையினர் வந்து சென்றிருந்தனர். யார் அவர்கள்? எதற்காக இப்படி வந்தார்கள்?

நாட்டில் ஒரு சர்வாதிகாரத்தை கொண்டுவருவதற்கான ஒரு கொடூரமான முயற்சி இது. நீங்கள் இப்படித் தன்னிச்சையாக நடந்து கொள்ள முடியாது.

இதேவேளை டொலர் நெருக்கடியை தீர்க்கவும், நாட்டை மீட்டெடுக்கவும் பண்டோரா ஆவணங்களில் பெயரிடப்பட்டவர்களின் பின்னல் சென்று பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள். பண்டோரா ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இந்நாட்டு டொலர் கொள்ளையை அந்தந்த நாடுகளில் இருந்து இந்நாட்டுக்கு கொண்டு வருவதன் மூலம் டொலர் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அவற்றை இந்நாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்தால் நாட்டில் எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது.

நாட்டில் ஏன் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது? எந்த காரணத்திற்காக நாட்டில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது? சமூக வலைத்தளங்கள் நாட்டில் முடக்கப்பட்டமைக்கான காரணம் என்ன?

நாட்டின் டொலர் பிரச்சினையை தீர்ப்பதற்காக எம்மிடம் தீர்வுகள் உள்ளன.

– என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பதவி விலகார் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இன்று நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷமன் கிரியெல்ல எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

ஜனாதிபதிக்கு 69 லட்சம் பேர் வாக்களித்துள்ளனர் என்பதை லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு நினைவுபடுத்துகிறேன். ஜனாதிபதி ஒரு போதும் பதவி விலக மாட்டார் என்பதை அரசாங்கம் என்ற விதத்தில் நாங்கள் தெளிவாகக் கூறுகின்றோம். இந்தப் பிரச்சினைக்கு நாங்கள் முகம் கொடுப்போம். – என்றார்.

## சுகாதார அமைச்சுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தினால் சுகாதார அமைச்சுக்கு முன்னால் இவ்வாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக இன்று நண்பகல் செய்தியாளர் தெரிவித்தார்.

இதன் காரணமாக அப்பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சால்வையைத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமல் ராஜபக்ஷவிடம் ஏற்பட்டிருந்த இந்த மாற்றம் குறித்து பலரும் பேசிக் கொண்டமையைக் காண முடிந்தது.

சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியின் முன் வரிசையில் நான்காவது ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

இதனிடையே, சால்வை அணியாதமை குறித்து ஊடகவியலாளர்கள் குழு அவரிடம் கேள்வி எழுப்பிய போது, அவர் உறுதியான பதில் அளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சால்வையால் பயனில்லை. எனக்கு ஆடை வேண்டும் என சமல் ராஜபக்ஷ கூறியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாடாளுமன்றத்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவுக்கும் இடையில் ஏற்பட்ட கடும் வாக்குவாதத்தை தொடர்ந்து நாடாளுமன்றம் இன்று காலை 10 நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார உரையாற்றும்போது அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தொடர்ந்து குறுக்கிட்டமையினால் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்நிலையில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவியை ராஜினாமாச் செய்யவே மாட்டார் என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சபைக்கு அறிவித்தார்.

அவரது பதில் ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் இடையே வாக்குவாதத்தை விளைவித்தது. ஐக்கிய மக்கள் சக்தியின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போதைய ஜனாதிபதியை ராஜினாமா செய்யுமாறு வலியுறுத்தி நாடாளுமன்றத்துக்குள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களின் ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்றம் சற்று நேரத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## பெரும்பான்மை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய நாடாளுமன்ற ஒத்தி வைப்பிற்கு பின்னர் நடாத்தப்பட்ட விசேட கட்சி தலைவர் கூட்டம் மற்றும் அரசில் இருந்து விலகினர் என அறிவித்த சுதந்திர கட்சியின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புக்கள் இதனை தெளிவுபடுத்துகின்றன.

அந்தவகையில் சுயாதினமாக இயங்குவார்கள் என நேற்று அறிவிக்கப்பட்ட பட்டியல்களில் இருந்த 43 பேரில், அருந்திக்க பெர்ணாண்டோ , ரொஷான் ரணசிங்க, கயான் ஆகிய மூவர் தாம் இன்னும் அவ்வாறானதொரு முடிவை எடுக்கவில்லை என அறிவித்துள்ளனர்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் உறுப்பினர்களில் ஹரீஸ், பைசல் காசிம், நசீர் அகமட் ஆகிய மூவரும் சுயாதீனமாக இயங்கப்போவதாக நேற்று சபையில் அறிவித்தார்.

ஆனால் இசாக் ரஹ்மான், அலி சப்ரி ஆகியோர் தமது முடிவுகளை அறிவிக்கவில்லை.

அதேபோன்று முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரும், தற்போது மௌனம் காத்துவருகின்றனர்.

எதிரணியில் இருந்து 20 ஆவது திருத்தச்சட்டத்திற்கு ஆதரவளித்து அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட அரவிந்தகுமார், டயானா ஆகியோரும் தமது முடிவை வெளிப்படையாக அறிவிக்கவில்லை. எனவே, இவர்களின் ஆதரவும் தமக்குதான் என அரசாங்கம் கருதுகின்றது.

இந்த உதிரிகளுடன் சேர்த்துத் தங்கள் பக்கத்தில் இன்னும் 115 க்குக் குறையாத எம்.பிக்களின் ஆதரவு இருப்பதாக ராஜபக்ஷ தரப்பு கூறுகின்றது.

நாடாளுமன்றத்தில் தனிக் குழுவாக இயங்கப் போகின்றார்கள் என அறிவித்த பலர், அரசாங்கத்தை வீழ்த்துவதற்காக நாடாளுமன்றத்தில் எடுக்கப்படும் முயற்சிகளின் போது நடுநிலை வகிப்பார்களே தவிர, அரசை எதிர்க்கமாட்டார்கள் என்றும் ராஜபக்ஷ தரப்பு மிக நம்பிக்கையாகக் கருதுகின்றது.

மாற்று அரசு ஒன்றை அமைப்பதற்கான ஒற்றுமை எதிரணிகள் இடையே ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அடியோடு இல்லை என்றும் –

அந்த இணக்கம் எதிரணிக்குள் ஏற்படாத வரை தற்போதைய அரசுக்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை சறுக்காது என்றும் –

ராஜபக்ஷக்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசியல் அவலத்தில் அரசு

**பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், தான் பிறப்பித்த அவசரகால நிலைப் பிரகடனத்தை அதைக் கொண்டு வந்த வேகத்திலேயே வாபஸ் வாங்கி, தமது அரசுக்கு நாடாளுமன்றத்தில் ஏற்படவிருந்த பெரும் பின்னடைவை – நெருக்கடியை – தற்காலிகமாகச் சமாளித்திருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.**

**அவசரகால நிலை அறிவித்தலை ஐந்து நாள்களுக்குள் அரசு கைவிட்டாலும், அந்தப் பிரகடனத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு நாளை மன்றில் எடுத்துக் கொள்ளப் படும் போது இந்த அறிவிப்பின் சட்ட வலிமை மற்றும் தார்மீக நியாயங்கள் எல்லாம் பிய்த்துதறப்படும், உண்மைகள் வெளிப்படும் என நம்பலாம்.**

**நேற்றுக் கூடிய நாடாளுமன்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் மேற்படி அவசரகால நிலைப் பிரகடன அறிவிப்பை இன்று நாடாளுமன்றத்தில் விவாதத்தில் எடுத்துக் கொள்வது என்று ஆரம்பத்தில் அரசுத் தரப்பு ஒப்புக்கொண்ட போதிலும், கூட்ட முடிவில் இறுதி செய்யப்பட்டு அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் இந்த விடயம் இருக்கவில்லை.**

**அதனால், இன்று காலை நாடாளுமன்றம் கூடும்போது நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை இடைநிறுத்தி, அதன் பின்னர் மேற்படி அவசர நிலைப் பிரகடனம் பற்றிய விவாதத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சிகள் தீர்மானித்து இருந்தன. அக்கோரிக்கைக்கான பிரேரணை வாசகங்கள் அடங்கிய – சபாநாயகருக்கு முகவரியிடப்பட்ட – கடித நகல் நேற்று மாலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தினால் தயார் செய்யப்பட்டிருந்தது.**

**இந்தத் தகவல் கசிந்தமையால் ஆளும் தரப்பு முந்திக் கொண்டுவிட்டது.**

**அரசு அறிவித்த அவசரகால நிலைப் பிரகடனம் இன்று நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படுமானால் அதற்கு எதிராக அதிக வாக்குகள் விழுந்து, அவசரகால நிலைப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டு, அரசு கவிழ்ந்ததான நிலைப்பாடு – தோற்றப்பாடு – உருவாகி விடும் ஆபத்து அதிகம் இருந்தது.**

**அதைப் புரிந்து கொண்டு, முந்திக்கொண்டு, செயற்பட்டிருக்கின்றது அரசுத் தலைமைப் பீடம். அவசர நிலைப் பிரகடனத்தை அவசர அவசரமாக அது வாபஸ் வாங்கி, நிலைமையைச் சமாளித்து இருக்கிறது.**

**அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. மக்கள் போராட்டங்களின் போது தீ வைத்தல் போன்ற வன்முறைகள் இடம்பெறுகின்றன எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரே வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.**

**பல இடங்களிலும் ஒரே சமயத்தில் வெடிக்கும் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் பற்றிய காரணத்தை முன்னிறுத்தித்தான் அவசரகால நிலை, ஊரடங்குச் சட்டம், சமூக ஊடக முடக்கம் போன்றவற்றை ஆளும் தரப்பு பிறப்பித்தது. அந்த நெருக்கடிகள் இன்னும் உள்ளன. விளக்கமாகக் கூறுவதானால் முன்னரை விட அவை இப்போது விஸ்வரூபமெடுத்து வருகின்றன. எனவே அரசு கூறிய காரணத்தின் அடிப்படையில், இந்தச் சமயத்தில்தான் அவற்றைக் கையாள்வதற்கு அரசுக்கு அவசரகால நிலைமை மேலும் முக்கியமாகத் தேவைப்படுகிறது என்பது திண்ணம். ஆனால் தன்னுடைய அரசியல் வலிமையின்மை காரணமாக, வேறு வழியின்றி நாட்டின் பாதுகாப்புக்கு அவசியம் எனத் தான் முன்னர் கருதி – கூறி – தானே கொண்டுவந்த அவசரகாலப் பிரகடன நடவடிக்கையிலிருந்து இப்போது பின்வாங்குகிறது கோட்டாபய அரசு.**

**அப்படிப் பார்த்தால் நாட்டின் பாதுகாப்பு ஸ்திரத்தை விட, தனது அரசின் அரசியல் ஸ்திரம்தான் முக்கியம் என்று கருதி, அதற்கே முன்னுரிமை கொடுத்து, செயற்படுகின்றது இந்த அரசு என்பது தெளிவாகின்றது.**

# மக்கள் வரிப் பணத்தில் ஆட்சியாளர்கள் கொள்ளையடித்ததை மீளப்பெறவேண்டும்!

## மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்கிறார் வேலுகுமார்



மக்களின் வரிப்பணத்தில் ஆட்சியாளர்கள் கொள்ளை அடித்தவற்றை மீளப் பெற வேண்டும் என மக்கள் தற்போது வலியுறுத்தி வருகின்றனர். எனவே, மக்களின் இந்த கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு, நாடாளுமன்றத்தில் விசேட சட்டம் இயற்றப்பட வேண்டும். எனத் தமிழ் முற்போக்கு கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு–

நாட்டு மக்கள் தற்போது தன்னெழுச்சியாகப் போராடி வருகின்றனர். இன்று வீதியில் இறங்கி 'போ! கோட்டா, போ!' என மக்கள் கோஷம் மூலம் ராஜபக்ஷக்களை வெளியேறச் சொல்கிறார்கள்.

அதுமட்டுமல்லாது 'இந்நாட்டில் பொது மக்களின் பணம், அரசியல்வாதிகளால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது' என்கின்றார்கள். மக்களிடம் ஆட்சியாளர்கள் கொள்ளையடித்த பணம், ஆட்சி கதிரையில் – முக்கிய பதவிகளில் இருந்தவர்கள் வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள பணம் ஆகிய–வற்றை நாட்டுக்கு கொண்டு வந்து, அரசுடமையாக்க வேண்டும் எனவும் கோரிவருகின்றனர்.

எனவே, கடந்த 3 தசாப்தங்களுக்கு மேலாக இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை நாட்டுக்குக் கொண்டுவர விசேட சட்டம் இயற்றப்பட வேண்டும். மக்களின் இந்தக் கோரிக்கையை அவசர விடயமாகக் கருதி, அவசர சட்டமூலத்தின் ஊடாக இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அப்பணம் மீள அவர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். நாட்டின் சொத்தாக்கப்பட வேண்டும். ஆகவே தான் இந்த உயரிய சபையிலே கேட்கின்றேன், மக்கள் ஆணையை ஏற்று, விசேட சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றுங்கள்.

அதன் மூலம் கடந்த 30 ஆண்டுகாலம் அரசியல் ரீதியாகப் பதவி வகித்த அனைவரதும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலின் உள்ள சொத்துக்கள் பற்றி பரிசீலனை செய்யுங்கள். மோசடிகாரர்களிடம், கொள்ளையடித்த பணத்தை அறவிடுங்கள்.

இல்லையெனில், உண்மையிலேயே இந்த நாட்டுக்காக அரசியலில் இருந்து பல தியாகங்களைச் செய்த, பல அபிவிருத்திகளுக்கு முன்னின்ற, நல்லவர்களும் இந்தக் கொள்ளைக் கூட்டத்துக்குள் சேர்க்கப்படுகின்றனர். ஆனால் இன்றும் நாடாளுமன்றத்தில் காண முடிவது, ராஜ பக்ஷக்களைப் பாதுகாப்பதற்கான நாடகமே ஆகும். பல குழுக்கள் எழுந்து, நாம் இன்று முதல் சுயாதீனமாகச் செயற்படுகின்றோம் என்கின்றார்கள். ஆனால் ஆளும் தரப்பின் ஆசனங்களில் இருந்து வெளியேறுவதாக இல்லை. இவ்வாறு தொடர்ந்து முழு நாட்டையும் ஏமாற்ற முடியும் என நினைக்க வேண்டாம். – எனத் தெரிவித்தார்.

# கோட்டா பதவி விலகினால் அடுத்த திட்டம் என்ன?

## நாமல் கேள்வி



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமா செய்தால், நாட்டின் அடுத்த திட்டம் என்ன என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனநாயகத்தின் கோட்பாடுகளை மீறி அரசாங்கங்களை மாற்ற முடியாது என அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

'இன்று கோட்டா வீட்டுக்குப் போ என்று சொல்கிறீர்கள். ஆனால் நாளை அவர் பதவி விலகினால் என்ன திட்டம்? யார் வழிநடத்துவார்கள்?' என்றும் அவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால் அடுத்துவருபவரும் இதேபிரச்சினைகளையே எதிர்கொள்ள வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, அனைவரும் இணைந்து மக்களின் கோபத்தைத் தணிக்க முதலில் செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோட்டாவைப் பலிக்கடாவாக்க முயற்சி!

## சரத்பொன்சேகா சுட்டிக்காட்டு

அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பலிகடா ஆக்க முயற்சிக்கின்றனர் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மீது பழியை சுமத்திவிட்டு நாடாளுமன்றில் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாகச் செயற்படுகின்றனர் என அறிவித்துள்ளனர் என அவர் குற்றம் சாட்டினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டுவந்த அவர்களுக்கும் சமமான பொறுப்பு உள்ளது என சரத் பொன்சேகா தெரிவித்தார்.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு

புதன்கிழமை
06.04.2022

# ரஷ்ய படைகள் தாக்குதலால் ஒருவர் கூட உயிரிழக்கவில்லை புச்சா நகர் படுகொலை புகாருக்கு ரஷ்யா திட்டவட்ட மறுப்பு

புச்சா நகரில் அப்பாவி மக்களை ரஷ்யா கொன்று குவித்ததாக உக்ரைன் குற்றம் சாட்டி இருக்கும் நிலையில், ரஷ்யா அதனை திட்டவட்டமாக மறுத்துள்ளது. உக்ரைனின் புச்சா நகரில் ரஷ்யா ராணுவத்தால் 400 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்ட நிகழ்வு உலகம் முழுவதுமாக பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இது ஒரு இனப் படுகொலை என விமர்சித்து இருந்த உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி,ரஷ்ய ராணுவத்தின் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து இருந்தார்.ஆனால் உக்ரைனின் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்துள்ள ரஷ்யா, ‘உக்ரைனில் அட்டூழியம் என்ற செய்தி கட்டுக்கதை மட்டுமே. ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருந்த எந்த இடத்திலும் கொடுமைகள், கொலைகள் நடக்கவில்லை. இது கோபத்தை ஏற்படுத்தும் செய்தி மட்டுமே. புச்சா ரஷ்ய கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில், ஒரு உள்ளூர் நபர் கூட எந்த வன்முறை நடவடிக்கையால் பாதிக்கப்படவில்லை’ என்று கூறி உள்ளது. புச்சா நகர பகுதியை கடந்த சனிக்கிழமையே தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட்டதாக உக்ரைன் கூறி இருந்த நிலையில், அதன் பிறகு தான் உடல்கள் சிதறி கிடந்த காட்சிகள் வெளியாகின என ரஷ்யா கூறியுள்ளது.

இதனிடையே தீவிர பதில் தாக்குதலில் ஈடுபட்டு வரும் உக்ரைன் ராணுவ வீரர்கள் ஏராளமானோரை ரஷ்ய படைகள் சுற்றி வளைத்து சிறைபிடித்துள்ளனர். 100க்கும் மேற்பட்ட சிறைபிடிக்கப்பட்ட உக்ரைன் வீரர்கள் கைகளை உயர்த்தியபடி அழைத்து செல்லும் காட்சிகளை ரஷ்யா வெளியிட்டுள்ளது.







# ரஷ்யாவும் ஐ.எஸ். தீவிரவாதிகளும் ஒன்றுதான் நடவடிக்கை எடுக்காவிட்டால் ஐ.நா.அவையை மூடலாம்

## ஐ.நாவில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி உரை

போர்க் குற்றம் புரிந்த ரஷ்ய ராணுவத்தை சர்வதேச நீதி அமைப்பு முன்பு நிறுத்தமுடியாவிட்டால் ஐக்கிய நாடுகள் அவையை இழுத்து மூடிவிட்டு செல்வதே சிறந்தது என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி பேசியிருக்கின்றமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உக்ரைனின் புச்சா நகரில் ரஷ்யா ராணுவத்தால் 400 அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்ட நிகழ்வு உலகம் முழுவதுமாக பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக ஐ.நாவின் பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தில் காணொலி காட்சி வாயிலாக உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி உரையாற்றினார். 2ம் உலக போருக்கு பிறகு உக்ரைனில் ரஷ்ய ராணுவம் கொடூர போர்க் குற்றத்தை புரிந்து இருப்பதாக ஜெலன்ஸ்கி குற்றம் சாட்டியுள்ளார். அடுக்குமாடி குடியிருப்புகள், வீடுகளில் தங்கியிருந்த மக்கள் கொல்லப்பட்டதோடு, கார்களில் சென்றவர்கள் பீரங்கிகளால் காரோடு நசுக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர் என கூறினார்.ரஷ்ய ராணுவத்திற்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்று ஜெலன்ஸ்கி குற்றம் சாட்டி இருக்கிறார்.ரஷ்யாவை ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்காவிட்டால் ஐ.நா.அவையை இழுத்து மூடிவிடலாம் என்று ஆவேசமாக தெரிவித்தார். உக்ரைனின் புச்சா நகரில் சிதறிக் கிடந்த மனித சடலங்கள் தொடர்பாக ரஷ்ய ராணுவம் மீது தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்று ஜெலன்ஸ்கி கேட்டுக் கொண்டுள்ளார்.

# இங்கும் கூட பொருளாதார நெருக்கடி குவைத் அரசு பதவி விலகல்



மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான குவைத்தில் கடந்த 2019ம் ஆண்டு முதல் பிரதமராக இருந்து வந்தவர் ஷேக் சபா கலீத் அல் ஹமத் அல் சபா. கடந்த டிசெம்பர் மாதம் 5ம் திகதி குவைத்தில் பொதுத்தேர்தல் நடைபெற்றதையொட்டி பிரதமர் ஷேக் சபா தனது பதவியை ராஜினாமா செய்தார். தேர்தல் முடிந்து புதிய அரசு பதவியேற்றதும் ஷேக் சபாவை மீண்டும் பிரதமராக அரசர் ஷேக் நவாப் அல் அஹ்மத் அல் ஜாபர் அல் சபா நியமித்தார். இந்நிலையில், அமைச்சரவை அமைப்பதில் தேர்தல் முடிவுகள் பிரதிபலிக்கவில்லை என்றும், சபாநாயகர் மற்றும் நாடாளுமன்ற குழுக்களின் உறுப்பினர்களை தேர்வு செய்வதில் அரசின் தலையீடு இருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் குற்றம் சாட்டினர். இது தொடர்பாக பிரதமரிடம் கேள்வி எழுப்ப கோரும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு 30க்கும் மேற்பட்ட எம்.பிக்கள் அதற்கு ஆதரவளித்தனர்.

இதனால், நாடாளுமன்றத்தில் குழப்பம் உருவானது. அதே நேரத்தில் கடும் பொருளாதார நெருக்கடிகளில் சிக்கி உள்ளதால், அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டது. கடன் பிரச்சினை காரணமாக அரசு சொத்துக்கள் விற்கப்பட்டன. இந்த விவகாரத்தில் பிரதமர் தலைமையிலான புதிய அமைச்சரவை கூண்டோடு ராஜினாமா கடிதத்தை அரசர் ஷேக் நவாப்பிடம் ஒப்படைத்தனர். இந்த வாரத்தில் அரசு மீது நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்க்கட்சிகள் கொண்டுவர இருந்த நிலையில், அரசு ராஜினாமா செய்தது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் குவைத்தில் 3வது முறையாக அரசு ராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கை, பாகிஸ்தானில் பொருளாதார நெருக்கடியால் நாட்டு அரசுகள் கவிழும் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், குவைத்திலும் இதே போன்ற நிலையில் அரசு ராஜினாமா செய்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# உக்ரைனில் அப்பாவி மக்கள் படுகொலை; ஐநா.வில் ரஷ்யா மீது போர்க் குற்ற பிரேரணை

உக்ரைனில் சித்திரவதை செய்யப்பட்டும், துப்பாக்கியால் சுட்டும் அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்டமையை கண்டித்து ரஷ்யா மீது ஐ.நாவில் போர் குற்ற பிரேரணை கொண்டுவர பல நாடுகள் திட்டமிட்டுள்ளன.

நேட்டோவில் இணைய எதிர்ப்பு தெரிவித்து உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் 6 வாரங்களை கடந்து, தொடர்ந்து வருகிறது. ரஷ்யா படைகளை எதிர்த்து உக்ரைன் ராணுவம் அதிரடி தாக்குதல்களை நடத்தி வருகிறது. எதிர்தி தாக்குதலால், பல இடங்களில் ரஷ்ய படைகள் முன்னேற முடியாமல் பின்வாங்கி உள்ளன. போர் நிறுத்தம் தொடர்பான பேச்சில், உக்ரைன் தலைநகர் கீவ் உள்ளிட்ட நகரங்களில் ராணுவ நடவடிக்கைகளை குறைப்பதாக அறிவித்துவிட்டு, அன் றையே தினமே தாக்குதல்களை ரஷ்யா தீவிரப்படுத்தியது. தற்போது, ரஷ்ய படைகள்ல் பின்வாங்கிய பல இடங்களில் கொடூரமான போர் குற்றம் அரங்கேறி இருப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

புச்சா நகரில் மட்டும் 500க்கும் அதிகமான அப்பாவி மக்கள் கை, கால்கள் கட்டப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டும், துப்பாக்கியால் சுட்டும் கொல்லப்பட்டுள்ளனர். பலர் உயிருடன் மண்ணில் புதைக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். குறிப்பாக, ரஷ்ய படைகள் தங்கியிருந்த இடத்தின் அருகில் உள்ள பைன் காடுகளில் ஏராளமான சடலங்கள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன.

இதுதொடர்பான நெஞ்சை உலுக்க வைக்கும் படங்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன. இதற்கு உலக நாடு கள் கடும் கண்டனம் தெரிவித்து, போர்க் குற்ற விசார ணைக்கு ரஷ்யாவை உட்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளன. மேலும், ரஷ்யாவின் போர்க் குற்றம் தொடர்பான ஆதாரங்களை சேகரிக்கும் பணி யும் தீவிரமாக நடந்து வருகிறது. இது குறித்து உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறுகையில், ‘அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ள ரஷ்ய வீரர்களை அடையாளம் காண, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துடன் உக்ரைன் இணைந்து செயல்படும்.

ஒவ்வொரு ரஷ்யனும் தங்கள் சக குடிமக்களில் யாரைக் கொன்றார்கள், அதற்கு கட்டளையிட்டது யார்? என்பது பற்றிய முழு உண்மையையும் கற்றுக் கொள்ளும் நேரம் வரும். ரஷ்யாவுக்கு எதிராக தாக்குதல் நடத்த ஆயுதங்கள் கொடுங்கள். எங்களுக்குத் தேவையான விமானங்கள்,தாங்கிகள், பீரங்கிகள், ஏவுகணை எதிர்ப்பு மற்றும் கப்பல் எதிர்ப்பு ஆயுதங்கள் பெற்றிருந்தால் ஆயிரக்கணக்கான மக்களைக் காப்பாற்றி இருக்கலாம்’ என்று தெரிவித்தார்.

உக்ரைனில் போர் தொடங்கிய பின்பு ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் கூட்டத்தில் ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதார தடைகள் உட்பட பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பதற்காக தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன இதற்கு பல நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

இந்நிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டம் நேற்று கூடியது. இதில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி காணொலி மூலம் உரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் ரஷ்யாவின் போர்க் குற்றம் தொடர்பான தீர்மானத்தை கொண்டு வர பல்வேறு நாடுகள் திட்டமிட்டுள்ளன. ஏற்கனவே, மனித உரிமை மீறல் உள்ளிட்ட போர் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தில் ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் வழக்கு தொடர்ந்து உள்ளது.

# இலங்கைக்கு நிதி அளிக்கையில் கச்சதீவை மீட்கும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட வேண்டுமென துரை வைகோ வலியுறுத்து




திண்டுக்கல் மாவட்ட ம.தி.மு.க. நிர்வாகிகள் செயற்குழுகூட்டம்கட்சிஅலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தலைமை நிலைய செயலாளர் துரை வைகோ சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தின் பின்னர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலைகள்தொடர்ந்துவிண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து வருகின்றன. மத்திய அரசு மக்களின் மன நிலையை உணராமல் தொடர்ந்து எரிபொருள் விலையை உயர்த்தி வருகிறது.

இதனால் உணவு, மருந்து, கட்டுமானப் பொருள், ஆடைகள் என அனைத்துப் பொருள்களும் விலையேற்றம் அடையும். கொரோனா தொற்றில் இருந்து விடுபட்டுமக்கள்இயல்புநிலைக்கு திரும்பி வரும் நிலையில் மத்திய அரசின் இந்த விலையேற்ற அறிவிப்பு அவர்களின் நலனை எண்ணிப்பார்க்காமல் உள்ளதோஎன்றஅச்சம்ஏற்பட்டுள்ளது.

இந்த விலை உயர்வை குறைக்காவிட்டால் ம.தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இன்னும்,இரு வருடங்களில் நாடாளு மன்ற தேர்தல் வர உள்ளது. பா.ஜ.கவை எதிர்த்து வலுவான எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைக்க வேண்டும் என அனைவரின் மனதிலும் தோன்றியுள்ளது. டெல்லியில் நடந்த தி.மு.க. கட்சி அலுவலக திறப்பு விழாவில் பல்வேறு கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டமைஇதற்கானஅடித்தளம்ஆகும்.

இலங்கையில் நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய அரசு ஒரு 10 லட்சம் ரூபா அளவுக்கு நிதி வழங்கியுள்ளது. இதில் தவறு கிடையாது. ஆனால், இலங்கையில் வாழக்கூடிய தமிழர்கள் கடந்த 40 நாள்களாக சந்தித்து வரும் பிரச்சினைகள், கச்சதீவுப் பிரச்சினை, ராமேஸ்வரத்தில் இருந்து கடலில் மீன் பிடிக்க செல்லும் மீனவர்களை இலங்கை ராணுவம் கைது செய்தது போன்ற பிரச்சினைகளை நிதி வழங்கும்போது பேச்சு நடத்தி தீர்வு காண வேண்டும். இது மத்திய அரசின் முக்கிய கடமையாகும், என்று துரை வைகோ வலியுறுத்தியிருக்கிறார்.

## இறையாண்மைக்கு எதிராக செயல்பட்டன என 22 யூடியூப் சனல்களை இந்திய அரசு முடக்கியது




இந்திய இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டுக்கு எதிராக செயல்பட்டு வருகின்றன என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் மேலும் 22 யூடியூப் சனல்களை இந்தியத் தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சகம் முடக்கியுள்ளது.

இதில் 18 இந்திய யூடியூப் சனல்கள்மற்றும்பாகிஸ்தானைச் சேர்ந்த 4 யூடியூப் சனல்கள் இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்தியில் பா.ஜ.க.அரசு பொறுப்பேற்ற பின்னர், தகவல் தொழில்நுட்ப சட்ட வழிகாட்டுதல் மற்றும் டிஜிற்றல் மீடியா நெறிமுறைகளின் கீழ் அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தி இத்தகைய தடை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## பிரதமர் மோடியை டெல்லியில் சந்தித்தார் ஆந்திர முதலமைச்சர் ஜெகன்மோகன் ரெட்டி

ஆந்திரப் பிரதேச முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நேற்று டெல்லியில் சந்தித்தார். இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

அப்போது, போலவரம் பாசனத் திட்டத்தின் திருத்தப்பட்ட மதிப்பீடு 55,000 கோடி ரூபா உள்பட பல்வேறு திட்டங்கள் மற்றும் நிலுவையில் உள்ள ஒதுக்கீடுகளுக்கு விரைவில் அனுமதி வழங்க வேண்டும் என கோரினார். ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டம் 2014 இன் பல விதிகள் இன்னும் செயல்படுத்தப்படாதது குறித்து பிரதமரின் கவனத்திற்கு முதல்வர் கொண்டு சென்றார்.

தனது மாநிலத்தின் பல்வேறு பிரச்சினைகளை பகிர்ந்து கொண்ட முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி, தெலுங்கானா மற்றும் ஆந்திரா இடையே ஜூன் 2014 இல் மாநிலம் பிரிக்கப்பட்டதில் இருந்து நிலுவையில் உள்ள மின்சாரத் தொகை தொடர்பான சர்ச்சையைத் தீர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

## இந்தியாவில் 5 சதவீதமே பெற்றோல் விலை அதிகரித்துள்ளது என்கிறார் அமைச்சர்



உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் 5 சதவீத அளவுக்கே பெற்றோல் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக இந்திய மத்திய பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையில் எரிபொருள் விலை உயர்வு குறித்த கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த மத்திய பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, ஏப்ரல் 2021 மற்றும் மார்ச் 22 க்கு இடையிலான காலகட்டத்தில், அமெரிக்கா எரிபொருள் விலையை 51 சதவீதம் அதிகரித்துள்ளது. அந்த ஒரு வருட காலகட்டத்தில், கனடா 52 சதவீதம், ஜேர்மனி 55 சதவீதம், இங்கிலாந்து 55 சதவீதம், பிரான்ஸ் 50 சதவீதம், ஸ்பெயின் 58 சதவீதம் பெட்ரோல் விலையை உயர்த்தியுள்ளன. ஆனால், இந்தியாவில் 5 சதவீதம் மட்டுமே உயர்த் தப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

# ராகுல் காந்திக்கு 50 லட்சம் ரூபா சொத்து எழுதி வைத்தார் 79 வயதான மூதாட்டி

உத்தரகாண்ட் மாநிலம் டேராடூனில் குடும்பத்தினர் யாரும் இன்றி தனியாக வசித்து வரும் புஷ்பா என்ற 79 வயதாகும் மூதாட்டி, தனது 50 லட்சம் ரூபா பெறுமதியான சொத்தினை ராகுல்காந்திக்கு வழங்கியிருக்கிறார்.

டேராடூனில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியையாக பணிபுரிந்து ஓய்வுபெற்ற இவர் வங்கிக் கணக்குகளில் பணம் சேமித்து வைத்துள்ளார். நல்ல வசதியான சொந்த வீட்டிலும் வசித்து வருகிறார். திருமணம் செய்து கொள்ளாத அவர் காங்கிரஸ் மீது மிகுந்த பற்று கொண்டவர். அவருக்கு டேராடூனில் 50 லட்சம் ரூபா மதிப்புள்ள வீடு மற்றும் வங்கி கணக்குகளில் பணம் உள்ளது.

தனது மரணத்திற்கு பிறகு தனது சொத்துக்கள் அனைத்தையும் யாருக்கு கொடுப்பது என்பது பற்றி அவர் ஆலோசனை செய்து வந்தார். அப்போது ராகுல்காந்திக்கு அந்த சொத்துக்களை கொடுத்து விடலாம் என்று தீர்மானித்தார். அதன்படி அவர் டேராடூனில் உள்ள நீதிமன்றத்தில் தனது பெயரில் உள்ள சொத்துக்களை தனது மரணத்திற்கு பிறகு காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்திக்கு வழங்க வேண்டும் என்று பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்.

இந்த நாட்டின் ஒற்றுமை மற்றும் வளர்ச்சிக்காக இந்திரா காந்தியும், ராஜீவ்காந்தியும் தங்கள் உயிரையே கொடுத்து தியாகம் செய்தனர். அவர்கள் வழியில் சோனியாவும், ராகுலும் நாட்டுக்காக சேவை செய்து வருகிறார்கள். அவர்களின் அர்ப்பணிப்பு என்னை மிகவும் கவர்ந்தது. எனவே எனது சொத்துக்களை ராகுல் காந்திக்கு வழங்குகிறேன், என்று அவர் தெரிவித்துள்ளார்.





காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அம்பாறை முஸ்லிம் பிரதேசங்களில் அரசுக்கு எதிரான போராட்டம் தீவிரம்







(நூருல் ஹுதா உமர்)

நாட்டின் பொருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்து மக்களின் வாழ்வாதாரம், அன்றாட ஜீவனோபாயம் கஷ்டத்திற்குள்ளான நிலையில்தற்போதிருக்கும் அரசாங்கத்திற்கும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கும் எதிராக நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது, மருதமுனை, கல்முனை, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை ஆகிய இடங்களில் செவ்வாய்க்கிழமை இரவு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. பிரதான வீதிகளில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அதிக எண்ணிக்கையான இளைஞர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு 'GO HOME GOTA', 'வீட்டுக்கும் கேடு நாட்டுக்கும் கேடு' 'கோட்டா நீ அமெரிக்காவுக்கே ஓடு!', 'ஆட்சி செய்து கிழித்தது போதும்', 'குடும்ப ஆட்சி வேரோடு ஒழிக!', 'பெற்றோல் இல்லை; டீசல் இல்லை; கோட்டாவுக்கு அறிவும் இல்லை', 'கோட்டா சேர்! தயவு செய்து போங்க சேர்!!', 'வெந்தது நாடு! கோட்டாவைத் தூக்கி வெளியில் போடு!', 'பொருளாதார நெருக்கடி, இரவெல்லாம் கொசுக்கடி', 'பஸிலே வெளியேறு!' போன்ற கோஷங்களையிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது பேரணியாக சென்றவர்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அதனைக் கட்டுப்படுத்தும் வேலைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தமையுடன் பாதுகாப்பு கடமையிலும் ஈடுபட்டிருந்தமையை காண முடிந்தது.

## நிந்தவூர் கடற்கரைச் சூழல் சுத்திகரிப்பு நடவடிக்கை



நூருல் ஹுதா உமர்

நிந்தவூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கடற்கரை சூழல் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம். அஷ்ரப் தாஹிரின் பணிப்புரையின் பேரில் நிந்தவூர் பிரதேச சபையின் ஊழியர்கள் ஊடாக சுத்தம் செய்யப்பட்டது.

நாட்டில் நிலவுகின்ற மின்வெட்டின் காரணமாக பொது மக்கள் அதிகமாக கடற்கரை பிரதேசத்திற்கு இயற்கை காற்றை சுவாசிப்பதற்காகவும் பொழுது போக்கிற்காகவும் வருகின்றமையை அவதானிக்க முடிகிறது. அவ்வாறு மக்கள் கூட்டம் அதிகரிப்பதனால் கடற்கரை சூழல் வெகுவாக மாசடைந்து வருவதை கருத்தில் கொண்டே இத்துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு பொழுது போக்கிற்காகவும் ஓய்வு நேரங்களைக் கழிப்பதற்காகவும் கடற்கரைக்கு வருகின்றவர்கள் தாங்கள் பயன்படுத்திய பொருள் கழிவுகளை முறையாக அகற்றி, சூழல் மாசுபடுத்தலை தடுப்பதற்கு உதவுமாறும் பிரதேச சபையூடான கழிவகற்றல் முகாமைத்துவத்திற்கு உதவுமாறும் பொது மக்களை தவிசாளர் தாஹிர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பொறிக்கப்பட்டதையும் விட கூடிய விலையில் விற்பனை

### அம்பாறையில் பொதுமக்கள் முறையீடு

அம்பாறை மாவட்டத்தில் சில வர்த்தக நிலையங்களில், அத்தியாவசியப் பொருள்கள் பொறிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என,அம்பாறை மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையிடம் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் தமிழ் – சிங்கள புத்தாண்டை சாதகமாக பயன்படுத்தி, அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதல் விலைக்கு அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன என முறையிட்டுள்ளனர். பொருள்களை பதுக்கி வைத்து சந்தையில் தட்டுப்பாடுநிலவுவதாகதெரிவித்து கூடுதல் விலைக்கு பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன எனவும் நுகர்வோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு, அம்பாறை மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையிடம் பொது மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

## நிந்தவூரில் சடலம் மீட்பு

அம்பாறை, நிந்தவூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அல்லிமூலைப்பகுதியில் ஆண் ஒருவர், நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், ஆரம்பக்கட்ட விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இம்மரணம், தற்கொலையா அல்லது கொலையா என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகளை நிந்தவூர் மத்திய முகாம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மூத்த ஊடகவியலாளர் நினைவாக நினைவு அரங்கு அங்குரார்ப்பணம்

(க.கிருபாகரன்)

கிழக்கின் சிரேஷ்ட ஊடகவியலாளரும், மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'கொண்டல்', 'விடிவானம்', 'தினக்கதிர்' பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியருமான அமரர் வீ.சு.கதிர்காமத்தம்பியின் சேவைகளை நினைவு கூரும் முகமாக வீ.சு.கதிர்காமத்தம்பி ஞாபகார்த்த அரங்கு கிழக்குஊடகவியலாளர்ஒன்றியஅலுவலகத்தில் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் எல்.தேவஅதிரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு அதிதிகளாக மட்டக்களப்பு மாநகரசபைமுதல்வர்தியாகராஜாசரவணபவன், மாநகரசபை உறுப்பினர்களான சிவம் பாக்கியநாதன், சீ.ஜெயந்திரகுமார், வீ.பூபாளராஜா மற்றும் வீ.சு.கதிர்காமத்தம்பியின் குடும்பத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வீ.சு.கதிர்காமத்தம்பி ஞாபகார்த்த அரங்கின் பெயர்ப் பலகையை அன்னாரின் பாரியார் திரைநீக்கம் செய்து வைத்தார். அத்தோடு அதிதிகளால் சிரேஷ்ட ஊடகவியலாளர் வீ.சு.கதிர்காமத்தம்பியின் செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக எடுத்துரைக்கப்பட்டன.



## சுகாதார ஊழியர்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சிமாவட்ட சுகாதார ஊழியர்கள் இன்றுவீதியில்இறங்கி இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அரசின் மோசமான நிதி நிர்வாகம் காரணமாக அத்தியாவசிய மருத்துகள் கூட இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த மோசமான நிலைமை நீடித்தால் இன்னும் ஆபத்தான கட்டம் ஏற்படும் என்பதனை எடுத்தியம்பவே இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் தாங்கள் ஈடுபடுகின்றனர் என அவர்கள் தெரிவித்தனர்.

## பொருளாதார நெருக்கடி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டத்தில் நாடு உள்ளது. இந்நிலைமை மேலும் உக்கிரமடையக்கூடும் எனப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதனாலேயே 'ஆரம்பக் கட்டம்' என நான் குறிப்பிடுகின்றேன்.

"இன்று நிலவும் எரிபொருள், சமையல் எரிவாயு, மின்சாரம் ஆகியவற்றுக்கான தட்டுப்பாட்டை விடவும், கடும் உணவு தட்டுப்பாடு ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்நிலைமையை அப்படியே விடுவதா அல்லது ஓரளவேனும் கட்டுப்படுத்திக்கொள்வதா என்பது இனி வரும் நாள்களில் நாம் எடுக்கவுள்ள நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது. – என்றும் சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, நாடாளுமன்ற வளாகத்தை போராட்டக்காரர்கள் சுற்றிவளைத்ததால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலை பற்றியும் சபாநாயகர் விவரித்தார்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தை நம்புபவர் என்ற அடிப்படையில் இத்தகைய சம்பவங்களைத் தான் கண்டிக்கிறார் எனவும், இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் உட்பட பாதுகாப்பு தரப்பினருக்குத் தான் அறிவித்துள்ளார் எனவும் சபாநாயகர் குறிப்பிட்டார். மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை, அழுத்தங்களால்தான் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும் என்றார் அவர்.

யாரால் இந்நிலைமை ஏற்பட்டது, தவறு எங்குள்ள என்பது பற்றி விவாதித்துப் பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்ளாமல், தற்போது என்ன செய்ய வேண்டும், அதனை எப்படிச் செய்ய வேண்டும் என்பது தொடர்பில் விவாதித்து, ஒன்றுமையாகத் தீர்வை எட்டுங்கள். கூட்டு நடவடிக்கை வெற்றியளிக்கும் என்ற பாடத்தை வரலாறு எமக்கு உணர்த்தியுள்ளது – என அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சபாநாயகர் சுட்டிக் காட்டினார்.

நாடாளுமன்றம் தற்போது எதிர்கொண்டுள்ள இந்நிலைமையை ஜனநாயக வழியில் தீர்க்கலாம் என நாம் நம்புகின்றேன். அவ்வாறு முடியாமல் போனால் அதன்மூலம் நாடாளுமன்ற ஜனநாயகம் தோற்கடிக்கப்படும். மீண்டும் இருண்ட யுகம் உருவாகக்கூடும். எனவே, தோல்வி அடையாமல் இருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். – என சபாநாயகர் கோரிக்கை விடுத்தார்.

அரசியல் பேதங்களை, அரசியல் நோக்கங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, நெருக்கடி நிலைமையில் இருந்து மீள்வதற்கான பொது வேலைத்திட்டத்தை அரசமைப்பின் பிரகாரம் ஜனநாயக வழியில் எடுங்கள். அதனை உடன்செயற்படுத்துங்கள். இவ்வாரத்துக்குள் அதனை செய்து முடியுங்கள். இதன் மூலம் நாடாளுமன்றத்தின் உயரிய தன்மையும், மக்களும் பாதுகாக்கப்படுவார்கள். – என்றும் சபாநாயகர் கோரிக்கை விடுத்தார்.






# பொதுச் சொத்துக்களின் சேதங்களை ஆர்ப்பாட்டங்களின்போது தவிர்க்குக!

## பாதுகாப்பு செயலர் கோரிக்கை



அமைதியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதைத் தவிர்க்குமாறு இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) கமல் குணரத்ன பொது மக்களை வலியுறுத்தினார்.

அத்தோடு, வன்முறைச் செயல்களில் ஈடுபடுகின்றமையை தவிர்க்குமாறு அவர் தொலைக்காட்சி அறிக்கையொன்றில் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அமைதியாக இருக்கும் என்றும் மக்களின் ஜனநாயக உரிமைகளை வெளிப்படுத்துவதாகவும் கூறி சில போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டாலும், இரண்டு குழுக்கள் இந்த போராட்டங்களை நடத்துவதை அவதானிக்க முடிகிறது என்றும் பாதுகாப்புச் செயலாளர் கூறினார்.

ஒரு பிரிவினர் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், மற்றொரு பிரிவினர் வேண்டுமென்றே பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்து பொது சாலைகள் மற்றும் பொது இடங்களில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கின்றனர் எனவும் அவர் கூறினார்.

இரண்டாவது குழு ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுள்ளது என்றும் பாதுகாப்புச் செயலாளர் கூறினார்.

சில பகுதிகளில், மோட்டார் சைக்கிள்களில் எதிர்ப்பாளர்கள் இடம் விட்டு இடம் நகர்ந்து, குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மீது பெற்றோல் குண்டுகள் மற்றும் கற்களைப் பயன்படுத்தி தாக்குதல்களை நடத்தினர் என்றும் அவர் குறிப்பிட்டார். அதே நேரத்தில் மற்றொரு குழு சொத்துக்களைச் சூறையாடுவதில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், போராட்டக்காரர்களின் குடியிருப்புக்குள் கொள்ளையர்கள் புகுந்து திருடுகின்றனர் எனவும் பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சு, பொது பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொலிஸாருடன் முப்படைகளும் இந்தப் போராட்டங்களைக் கண்காணித்து வருகின்றன என்றும் அமைதியான போராட்டங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றும் அவர் தெரிவித்தார். எவ்வாறாயினும், வன்முறைச் செயல்களைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், இந்த நடவடிக்கைகளுக்குக் காரணமானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வன்முறையை தூண்டும் நபர்களை நம்பி ஏமாற வேண்டாம் என்றும் அவர் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார்.

# நாட்டின் நெருக்கடிக்கு பிரதமரே முழுப்பொறுப்பு!

## குமார வெல்கம சாடல்



நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே பொறுப்பேற்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) பேசிய அவர் –

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராகக் கொண்டுவரும் தீர்மானத்தை எதிர்த்த முதல் நபர் தான் என்றும் கூறினார்.

மேலும் ஜனாதிபதி வேட்பாளராக கட்சியில் மூத்தவர்களைப் பரிசீலிக்க பரிந்துரைத்த போதும், மஹிந்த ராஜபக்ஷ அதற்கு செவிசாய்க்கவில்லை என்றும் குமார வெல்கம குறிப்பிட்டார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் தவறான முடிவை எடுத்தார் என்றும் அதுவே இன்று முழுநாடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலைமைக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பொறுப்புக்கூற வேண்டும் என குமார வெல்கம தெரிவித்தார்.

# அமைச்சர்களின் வீடுகள் மீது தாக்குதல்; அதிகாரத்தை ஜனாதிபதி பயன்படுத்துக

## றொஷான் ரணசிங்க கோரிக்கை



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்தை பயன்படுத்துமாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் றொஷான் ரணசிங்க நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமைச்சர்களின் வீடுகள் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் ஜாதிக ஜன பலவேகய, முன்னிலை சோசலிசக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகளின் பலருக்கு தொடர்பு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக மக்கள் தங்கள் கோபத்தைக் காட்ட வீதிக்கு வந்துள்ளனர் எனக் கூறிய அவர், ஆனால் பல கட்சி உறுப்பினர்கள் போராட்டங்கள் மூலம் தங்களுக்கு நன்மைகளைத் தேடுகிறார்கள் என்றும் கூறினார்.

எனவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் முன்னாள் இராஜாங்க அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

நாட்டு மக்களைக் கருத்திற் கொண்டு ஜனாதிபதி தீர்மானம் எடுக்க வேண்டிய தருணம் வந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இருதலை மணியன் பாம்புடன் இருவர் கைது

ராமநாதபுரம் ரயில் நிலையப் பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த அரியவகை இருதலைமணியன் பாம்பு மற்றும் 6 பச்சைக் கிளிகளை வனத் துறையினர் மீட்டுள்ளதோடு, சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராமநாதபுரம் ரயில் நிலையத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் இருவர் நிற்கின்றனர் என வன உயிரின உதவிப் பாதுகாப்பாளர் கணேசலிங்கத்துக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் வன உயிரின அதிகாரிகள் அந்தப் பகுதிக்குச் சென்று சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்ற இருவரையும் பிடித்து சோதனையிட்டனர்.



அப்போது அவர்கள் ஒரு வாளியில் இருதலை மணியன் பாம்பு மற்றும் 6 பச்சைக் கிளிகளை வைத்திருந்தமை தெரியவந்தது.

இதையடுத்து அவற்றை உயிருடன் மீட்டதோடு, அவர்கள் வைத்திருந்த இருசக்கர வாகனத்தை பறிமுதல் செய்தனர். மேலும் அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் இருவரும் தூத்துக்குடி மாவட்டம் ஏரல் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது.

இருவரும் தூத்துக்குடி பகுதியிலிருந்து இருதலை மணியன்வகைமண்ணுளி பாம்பும், கிளியையும் ரயில் மூலம் ராமேஸ்வரத்திற்கு கொண்டு செல்லத் திட்டமிட்டிருந்தமையும், அங்கிருந்து இலங்கை வழியாக சீனாவுக்கு கொண்டு செலப்பட இருந்தமையும் தெரிய வந்தது.

இதையடுத்து அவர்கள் இருவரும் வனப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ‘ஞானக்கா’ வீட்டுக்கு பலத்த பாதுகாப்பு

அநுராதபுரத்தில் தேவாலயமொன்றை நடத்தும் ‘ஞானக்கா’ என்ற பெண்ணின் வீட்டுக்கு முன்பாக மக்கள் மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவரின் வீட்டுக்கு பொலிஸ், இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஒஸ்லோ, பக்தாத், சிட்னி தூதரகங்கள் மூடப்பட்டன!

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரகத்தை மூட வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது. அதன்படி ஒஸ்லோ, நோர்வே மற்றும் பக்தாத், ஈராக் ஆகிய இடங்களில் உள்ள தூதரகங்கள் மற்றும் சிட்னியில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம் என்பன மூடப்படவுள்ளன.

ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மேற்படி தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரகம் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551பு, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.04.2022இல் வெளியிடப்பெற்றது.